பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை 09.04.2023 கதிர்150

## டெங்கைக் கட்டுப்படுத்த அமுலாகும் புதிய திட்டம்

டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தசுமார்10இலட்சம் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஆண் நுளம்புகளை ஒரே நேரத்தில் சுற்றாடலில் விடுவதற்குக் களனி பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு தயாராகி வருகின்றது.

அடுத்த மாதத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யவுள்ளது.

இந்த 10 இலட்சம் நுளம்புகளை வெளியிடுவதற்கு கம்பஹா பிரதேசத்தின் 300 ஹெக்டேயர் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா - கிடகம்முல்ல பிரதேசத்தில் முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டம் வெற்றியடைந்தது என்று களனிப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் நிலை மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் மேனகா ஹபுகொட ☞2

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மே முதல் வாரம் சபையில்

### எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கும் என நீதி அமைச்சர் விஜயதாஸ நம்பிக்கை

'ஊழல் எதிர்ப்புச் சட்ட மூலம் மே மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்தச் சட்ட மூலத்துக்கு எதிர்க்கட்சிகள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள் என எதிர் பார்க்கின்றேன்.'

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் செய்தியா ளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஊழல், மோச டிகள் தீவிரமடைந்த காரணத் தால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. ஊழல் ஒழிப்புக்காக நடைமுறை யில் உள்ள இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகள் துரிதகரமாக இல்லை. அதற்குப் பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

மோசடி செய்யப்பட்ட அரச சொத்துக்கள் அரசுடமையாக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கை மக்கள் மத்தியில் உள்ளது. தேசிய மட்டத்தில் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக இருப்பதால், கடந்த வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் சூடுபிடித்தன. இந்தக் கதைகள் ஏன் கிளம்பின. இதன் பின்னணி என்ன என்பவற்றைத்தான் இன்றைக்கு உங்களோடுபகிர்ந்துகொள்ளப்போகின்றேன்.

யார் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று பகிரங்கமாகவே விவாதங்கள் சூடுபிடித்தன. பொது ஜன பெரமுன என்கிற மொட்டுக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவதை கட்சியில் பலர் விரும்புகின்றார்கள் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார். ஆனால், அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் வேட்பாளராவதற்கு ரணில் பொருத்தமானவர்தான் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் ☞2

## பிரதமருடன் ஆணைக்குழு திங்களன்று சந்தித்து பேச்சு

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்புக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை சந்திப்பு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இந்தச் சந்திப்பை உறுதிப்படுத்தினார்.

"பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் கடந்த வாரம் இடம்பெறவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணிகளால் இடம்பெறவில்லை.

நடைபெறவுள்ள சந்திப்பின்போது, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு நிதி நெருக்கடியின் காரணமாக அடுத்த கட்டமாக எப்படிச் செயற்படுவது என்பது தொடர்பில் ஆராயப்படும். அதில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமையவே வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள், தபால் மூல வாக்கெடுப்பு உள்ளிட்டவை தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

பிரதமருடனான சந்திப்பினை அடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில்ஆணைக்குழுசெவ்வாய்க்கிழமைகூடி ஆராயும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில்களில் மோதுண்டு மூவர் சாவு

வெவ்வேறு இடங்களில் தொடருந்துகளில் மோதி மூவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலியிலிருந்துகொழும்பு நோக்கி வந்த தொடருந்தில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

தெஹிவளை தொடருந்து நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கல்கிஸைச் சேர்ந்த 28 வயது இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெஹி வளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பு - புறக்கோட்டையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த தொடருந்து மோதி வயோதிபர் ஒருவர் இறந்துள்ளார்.

மருதானை ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொரளையைச் சேர்ந்த 71 வயது ☞2

## ஊழல்வாதிகளைத் தண்டிக்கும் சட்டத்தை உடன் கொண்டுவருக

### அரசிடம் சஜித் வலியுறுத்து

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அன்றி ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தையே அரசு துரிதமாகக் கொண்டு வரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதன் ஊடாக, பன்டோரா பத்திரங்கள் மூலமாக அம்பலப்படுத்தப்பட்ட ஊழல்வாதிகள் மற்றும் கடந்த காலங்களில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த சட்டமூலத்தைக் கொண்டுவருவதன் மூலம் ஊழல்வாதிகளை உரிய முறையில் தண்டிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



ஆனால், தற்போது அரசு ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் சட்டமூலத்தையே கொண்டுவர முனைகின்றது என்றும், அதன் ஊடாக தமது உற்ற ஊழல்வாதி கூட்டாளிகளை அரசு பாதுகாக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார். (02)

## அரசியல் களத்தில் விரைவில் அதிரடி

### ராஜபக்சக்களின் சகா எதிர்வுகூறல்

'இலங்கையின்அரசியல் களத்தில் விரைவில் அதிரடிகள்காத்திருக்கின்றன. அவை என்னவென்று இப்போது எம்மால் சொல்ல முடியாது. அதிரடிகள் அரங்கேறிய பின்னர் அவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.'

இவ்வாறு ராஜபக்சக்களின் முக்கிய சகாவும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியில் இருந்து பலர் அரசுடன் இணையவுள்ளனர் என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். அதே வேளை, அரசிலிருந்து ஒரு குழுவினர் எதிரணிப் பக்கம் வரவுள்ளனர்என்றுமற்றொரு தரப்பினர்தெரிவிக்கின்றனர்.



ஆனால், உண்மையில் எந்தத்தரப்பில்'பல்டி'இடம்பெறும் என்று பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

நாம் அமைச்சுப் பதவிக்காக அலையவில்லை. தரமான அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனூடாக எமதுசேவைகளைவழங்கத் தயாராக இருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பலமான ஆளும் கட்சி. அது பிளவடையக் கூடாது என்பதுதான் எமது விருப்பம் - என்றார். (02)

## மக்களின் பசிக்கு எதிரான ஆயுதமே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

### தம்மதின்ன தேரர் விளாசல்

புதியபயங்கரவத எதிர்ப்புச் சட்டம் மக்களின் பசிக்கு எதிரான ஆயுதமாகும் என்று களனி பல்கலைக்கழகத்தின் நெதலகமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயித்த ஞாயிறு தாக்குதல் இடம்பெறவுள்ளதாக அறித்தல் கிடைத்தபோதும் இவ்விதமான சட்டத்தினைக் கொண்டுவரவில்லை. அந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரும் இவ்வாறான சட்டத்தினைக் கொண்டுவரவில்லை.

பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக கூறிய போதும் ஆட்சியாளர்கள் இவ்விதமான சட்டத்தைக் கொண்டுவராத நிலையில் தற்போது மிகவும் மோசமான சட்டமொன்றைகொண்டுவந்துள்ளது.

புதிய சட்டமானது மக்களை அடக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டதாகும் என்பது தெளிவாகின்றது.

தற்போது மக்கள் பொருளாதார நெருக்கடியால் வீதிக்கு இறங் குகின்றார்கள். தமது பசிக்காக வீதிக்கு இறங்குகின்றார்கள். அவர்களை அடக்குவதற்காக புதிய சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன.

அமெரிக்காவில் பிளக்லைவ் மாற்றர் என்ற செயற்றிட்டம் காணப்படுகின்றது. அது கறுப்பினத்தவர்களின் உரிமைக்கானது. ஆனால் இலங்கை மக்கள் தமது அடிப்படைத் தேவைக்காகக்கூடப் போராட முடியாத நிலையொன்று இங்கு உருவாக்கப்படுகின்றது -என்றார்.

## அரகலய தொடங்கியபோதே அடித்து விரட்டச் சொன்னேன்

### கோட்டா செய்யவில்லை என்கிறார் எஸ்.பி.திஸநாயக்க

காலிமுகத்திடலுக்கு அரகலய போராட்டம் என 200 இளைஞர் யுவதிகள் முதற்கட்டமாக வருகைதந்து முகாமிட்டபோது அவர்களை அடித்து விரட்டுமாறு நான் கோரியபோதும் கோட்டாபய ராஜபக்ஷ அதனைச் செய்யவில்லை என்று பொது ஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

வெலிமடவில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலி முகத்திடலில் தொடர்ச்சியாகஇருந்துபோராடப்போவதாக கூறியவாறு 200 இளைஞர் யுவதிகள் வந்து முகாமிட்டனர். அப்போது நான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தேன்.

அவரிடம், காலிமுகத்திடலை மலசலகூடமாக்க இடமளிக்கவேண்டாம். தற்போது வந்திப்பவர்களை பொலிஸாரையோ அல்லது இராணுவத்தினரையோ பயன்படுத்தி அடித்து விரட்டுங்கள் என்று கூறினேன்.

அவர் எனது யோசனையை உடனடியாக எதிர்க்கவில்லை. புன்னகையுடன் இருந்தார். இருப்பினும் நான் கூறியதை அவர் செய்யவில்லை. செய்திருந்தால் அவர் இன்னும் ஜனாதிபதியாகஇருந்திருப்பார்-என்றார்.

## பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிட்ட குற்றவாளிகளைத் தண்டியுங்கள்

### உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி சஜித் தெரிவிப்பு

'இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் பாரபட்சமற்ற விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.அப்போதுதான் ஈஸ்டர் தாக்குதலின் வலிமிகுந்த நினைவுகளைச் சுமந்துகொண்டிருக்கும்பாதிக்கப்பட்டவர்களுக்குநீதிகிடைக்கும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸதெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள உயிர்த்த ஞாயிறுவாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'மனித வாழ்வுக்கு விடுதலை அளித்த இயேசு கிறிஸ்துவின் துன்பம்,மரணம் மற்றும் உயிர்த் தெழுதலை நினைவுகூர்ந்து இன்று உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

மனித குலத்தை பாவத்திலிருந்து காப்பாற்றுவதற்காக, இயேசு கிறிஸ்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கல்வாரியின் கொல்கொத்தா மலையின் உச்சியில் சிலுவையில் அறையப்பட்டார். கிறிஸ்தவநம்பிக்கையின்படி, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நாள், அதாவது உயிர்த்தெழு ☞2

## 'மொட்டு'வின் ஆட்சிதான் இன்றும் தொடர்கின்றது

### புதிய ஜனாதிபதி, பிரதமருடன் வீறுநடை என்கிறார் மகிந்த



'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியே இன்னமும் தொடர்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடனேயே உள்ளார். இந்த ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு இங்கு ஒருபோதும் இடமில்லை.'

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகாலஅரசியல்நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

'மொட்டுவின் ஆட்சியில் ஜனாதிபதியும்,பிரதமரும்தான் பதவிவிலகினார்கள். ஆனால், புதிய ஜனாதிபதி, புதிய பிரதமருடன் 'மொட்டு' ஆட்சி இன்னமும் தொடர்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க, தினேஷ்குணவர்த்தன ஆகிய இருவரும் எனது சிறந்த நண்பர்கள். ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகிக்கும் அவர்களுக்குஎமதுகட்சியின்ஆதரவு தொடர்ந்தும் இருக்கும்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன எமது கட்சியின் மூத்த உறுப்பினர். அவரின் பதவியை நாம் பறிக்கவுள்ளதாக சில ஊடகங்கள் விஷமத்தனமான பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதற்குப் பின்னால் எதிர்க்கட்சியினர் உள்ளனர்' - என்றார். (02)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டுக் கட்சி முக்கிய பிரமுகருமான அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதெல்லாம் என்ன பின்னணியில் நடந்தன?

நாடாளுமன்றத்தில் மொட்டுகட்சியின் பின்வரிசை உறுப்பினர் ஒருவர் முன்னர் மகிந்த ராஜபக்சவுடன் மிக நெருக்கமாக இருந்தவர். பின்னர் அதிகார ஆசனத்திற்கு கோட்டாபய ராஜபக்ச வந்து குதித்தபோது அவரோடு சேர்ந்து கொண்டார். அவருக்குத் தீவிர விசுவாசிகளாக இருந்தார். கோட்டாபய திடீரெனத் தப்பியோடவேண்டி வந்த போது இந்தப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் தனித்து விடப்பட்டார். அரவணைக்க ஆளின்றி இருந்த இவர் பின்னர் மெல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒட்டிக் கொண்டார்.

கடந்த வாரம் இவருக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தரப்பிடமிருந்து அழைப்பு வந்தது. தன்னை அவசரமாகச் சந்திக்கும்படி அதில் தெரிவிக்கப்பட்டது. அழைப்பை ஏற்று அவரைச் சந்திக்கச் சென்ற இந்தப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோட்டாபய ஒரு செய்து முடிக்கவேண்டிய நம்பிக்கையான பணியை ஒப்படைத்தார்.

அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் டிலித் ஜெயவீரவே மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டும் என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார் கோட்டாபய. இந்த விடயம் உடனடியாகக் கட்சித் தலைமைக்கு எடுத்துச் செல்லப்படுவதுடன் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்பது தான் கோட்டாபய இந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு இட்ட பணி.

டிலித் ஜெயவீர என்பவர் வேறு யாருமல்லர் 'தெரன' ஊடகத்தின் உரிமையாளர். தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தளம், வானொலி என்று எல்லா வகையான ஊடகங்களையும் கொண்டிருக்கிறது அவரது நிறுவனம். அது தவிர வேறு பல வர்த்தகங்களும் அவருக்குச் சொந்தமாக இருக்கின்றன. கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு முன்னின்று செயற்பட்டவர். ஜனாதிபதித் தேர்தலில் அவரை வெற்றிபெற வைப்பதற்கு, அதுவும் அமோக வெற்றி பெற வைப்பதற்கு அவரது ஊடகங்கள் தலையால் நடந்தன.

பதிலுபகாரமாக தான் நியமித்த இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களிலும் டிலித்துக்கு இடம் வழங்கியிருந்தார் கோட்டா. இயற்கை வேளாண்மை தொடர்பான ஆணைக்குழு மற்றும் கிழக்கில் மரபுரிமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு எனஇரண்டிலும் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவரைத்தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் என்று கோட்டா விரும்புகிறார். தன்னை ஜனாதிபதியாக்கியவரைத் தான் ஜனாதிபதியாக்கி அழகு பார்க்க விரும்புகிறார் போலும் கோட்டா. அவரது விருப்பத்துக்கு அப்பால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போகிறார் என்று டிலித் உத்தியோகப்பற்றற்ற வகையில் சொல்லிவருகிறார்.

கோட்டா இட்ட பணியை சிரமேற்கொண்டு அந்த பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்தவிடம் சென்றார். கோட்டாவைச் சந்தித்த மறுநாளே விஜயமாராமத்தையில் உள்ள மகிந்தவின் இருப்பிடத்திற்குச் சென்றார். மகிந்தவைச் சந்தித்து டிலித்தை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது தொடர்பில் கட்சி முடிவெடுத்திருக்கிறதா என்று நேரடியாகவே கேட்டார். கோட்டாபய இது தொடர்பில் தன்னிடம் தெரிவித்தார் என்பதையயும் அவர் கூறினார். ஆனால், மொட்டுவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சிக்குள் எந்தக்கலந்துரையாடல்களும் நடக்கவில்லை என்று மகிந்த பதிலளித்தார்.

இல்லை. அதுபற்றிஎதுவும் முடிவு செய்யப்படவில்லை. டிலித்தான் கோட்டாபயவைக் கொண்டு வந்தவர். ஜனாதிபதியான பின்னரும் கோட்டாபய டிலித்தால் பாதுகாக்கப்பட்டார். அவர்கள் இருவரும் அப்படியொரு முடிவெடுத்திருந்தால் எனக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் அப்படியொரு முடிவு எடுக்கவில்லை என்பதுதான் மகிந்தவின் பதிலாக இருந்தது. அப்படியென்றால் யார் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர் மககிந்தவிடம் கேட்டார். அதற்கு நழுவல் போக்கில் பதிலளித்தார் மகிந்த.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து நான் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. இந்தஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என்று சிலர் சொல்கிறார்கள். அரசமைப்பின்படி அப்படிச் செய்ய தற்போதைய ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று வேறு சிலர் சொல்கிறார்கள். அதனால இந்த விடயத்தில் நாம் அவசரப்படத்தேவையில்லை. மற்றப் பக்கத்தில் ரணில் இப்போதைக்கு நன்றாகவே வேலை செய்கிறார். அதனால ஜனாதிபதித் தேர்தல் வருகிறபோது அது பற்றி நாம் ஆராய்வோம். ஆனால் டிலித் எமது ஜனாதிபதி வேட்பாளராக இருக்க முடியாது என்று கடைசியில் சொல்லியிருக்கிறார் மகிந்த.

இந்தக் கலந்துரையாடல்கள் நடந்த சில நாட்களின் பின்பே ரணிலை ஜனாதிபதியாக்க விரும்புவதாகத் தெரிவித்த அமைச்சர் காஞ்சன தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து இந்த விவாதம் சூடுபிடித்தது.

ஆகமொத்தத்தில ரணில் அடுத்த ஜனாதிபதியாவதற்கு ராஜபக்சக்களின் முழுமையான ஆசீர்வாதம் கிடைக்குமா என்கிற கேள்வி எழுந்துள்ள பின்னணியில்தான் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் ஆட்சியாளர்களுடன் இணையப் போகிறார்கள் என்ற கதை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அதன் பின்னணி பற்றி நாளை சொல்கின்றேன் வாசகர்களே. அதுவரை பொறுத்திருங்கள்.

**இடிமின்னல்**

## போட்டித்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் பொருட்களின் விலையைக் குறைக்க முடியும்

### வர்த்தக அமைச்சர் நம்பிக்கை



சந்தையில் போட்டித்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியும்என்றுவர்த்தகஅமைச்சர் நளின் பெர்னாண்டோ சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது தெரிவித்தார். உலக சந்தையில் விலை குறைவடைதல், மொத்த விற்பனை விலைகள்குறைவடைதல்-சில்லறை விற்பனை நிலையங்களில் விலைகுறைவடையாமை ஆகிய காரணிகளுக்கிடையிலானமுரண்பாடுகளை சந்தை போட்டித்தன்மையினூடாக மாத்திரமே நிறுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.'நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் மற்றும் நிறுத்தல் அளவை திணைக்களத்தின் மாவட்ட முகாமையாளர்கள் ஆகியோரை இணைத்து விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி, இந்த மாதம் முழுவதும் சந்தை நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், முரண்பாடுகள் காணப்படுமாயின் அவற்றில் தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது' - என்றும் வர்த்தக அமைச்சர் கூறினார். இதன்மூலம்,நுகர்வோருக்குபாதிப்பு ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில்நடவடிக்கைஎடுக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (02)

## பாதிக்கப்பட்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல், உயிர்த்த ஞாயிறு என்று அழைக்கப்படுகின்றது.

உயிர்த்தல் என்பது மனிதன் கடப்பதற்கு இயேசு வழங்கிய மாபெரும் பரிசு, அன்பைப் பற்றி நாம் பேசினால், ஈஸ்டர் நிச்சயமாக அதன் திருப்பு முனையாகும். ஈஸ்டர் அன்று புனித சபை பிறந்தது அன்பு மதம் உலகம் முழுவதும் பரவியது.

இதற்கிடையில், இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று 3 கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்பட 8 இடங்களை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இது நாட்டுக்கு ஒரு கரும்புள்ளியை உருவாக்கியது.

ஈஸ்டர் ஆராதனைகளில் கலந்துகொண்ட கிறிஸ்தவ பக்தர்கள் உட்பட ஒரு குழுவினர் உயிரிழந்தனர் மற்றும் ஏராளமானோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் பாரபட்சமற்ற விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஈஸ்டர் தாக்குதலின் வலிமிகுந்த நினைவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்.

அதற்காக அன்றும், இன்றும், நாளையும் உறுதியாக,மாறாமல் முன்நிற்போம் என்பதை குறிப்பிட விரும்புவதுடன், அந்தத் தாக்குதலின் நோக்கம் எதுவாக இருந்தாலும், அது ஒரு கோழைத்தனமான, மனிதாபிமானமற்ற, இழிவான தாக்குதல் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

மத நம்பிக்கையுடனும், மனித நேயத்துடனும், மத நடவடிக்கைகளுக்காக தேவாலயங்களுக்கு வரும் அப்பாவி மக்களைக் குறிவைத்து நடத்தப்படும் கொடூரமான தாக்குதல்கள்,குருட்டு பக்தி கொண்ட சில பைத்தியக்காரர்களின் மனிதாபிமானமற்ற நிலையை உணர்த்துகின்றது.

ஆனால், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி பாவத்தால் அன்புசிலுவையில் அறையப்பட்டாலும், நிச்சயமாக அன்பே உயர்வாகக் காணப்படும்.

உலக கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இனிய உயிர்த்த ஞாயிறு வாழ்த்துக்கள்!' - என்றுள்ளது. (02)

## ஊழல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஊழல், மோசடி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் அவதானம் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த பிரதான நிபந்தனைகளில் ஊழல் ஒழிப்புவிவகாரம் முன்னிலை வகிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது ஊழல் ஒழிப்பை இல்லாதொழிப்பதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டமூல வரைபு தயாரித்தல் பணிகள் 2015ஆம்ஆண்டுஆரம்பமாகி, 2018 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது.

பல்வேறு காரணிகளால் நல்லாட்சி அரசில் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை இயற்ற முடியாமல்போனது. காலம் கடந்த நிலையில் நாட்டின் தேவைக்காக ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கும் சிறந்த பொது மற்றும் அரசியல் சூழல் தோற்றம் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயங்கள், ஊழலுக்கு எதிரான சர்வதேச நியமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்பு தொடர்பில் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் முன்வைக்கப்பட்ட சகல கோரிக்கைகளும் இந்தச் சட்டமூல வரைபில் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஊழல் ஒழிப்பு செயற்பாடுகளை அதிகாரப் பூர்வமாகவும், வினைத் திறனான முறையிலும் முன்னெடுக்கும் வகையில் 'இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிரான விடயங்களை ஆராய்வதற்கான ஆணைக்குழு' ஒன்றை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்ட மூல வரைபு எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஊழல் ஒழிப்பு தொடர்பில் கருத்துரைக்கும் மக்கள் விடுதலை முன்னணியினர், ஐக்கிய மக்கள் சக்தியினர் இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (02)

## கட்சியைக் குழப்புவோர் மீது நடவடிக்கை தேவை

### சஜித்திடம் மரிக்கார் வலியுறுத்து



'ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதா ஸவிடம் கோரிக்கை விடுக்கின்றோம். எமது கட்சியிலிருந்து அரசு பக்கம் செல்பவர் கள் தாராள மாகச் செல்லலாம். நாம் நிச்சயம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைப்போம்.'

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவையில் இன்று(08)நடைபெற்றமக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்த அவர், மேலும் பேசுகையில்,

'ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணையவுள்ளனஎன்றுகூறப்படுகின்றமை உண்மைக்குப் புறம்பான தகவலாகும்.

எம்மில் உள்ள 70 வயதைத் தாண்டிய சிலருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சுப் பதவியை வகிக்கவும், எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவும் ஆசையுண்டு. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எனவே, கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் இவ்வாறான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை வலியுறுத்துகின்றோம். சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று போராடிய சிலரில் நானும் ஒருவன். எனவே, இந்தக் கோரிக்கையை அவரிடம் முன்வைக்கும் உரிமை எனக்குண்டு.

தற்போது மக்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. இலவசமாக அரிசியைப் பெற்று வாழும் நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தத் திட்டங்களின் நோக்கங்களை மக்கள் நன்கு அறிவார்கள்.' - என்றார். (02)

## ரயில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயோதிபரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மருதானைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, அளுத்கமவில் இருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

வாதுவ, ரத்நாயக்கவில் வசிக்கும் 39 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

வாத்துவ - தல்பிட்டிய ரத்நாயக்க வீதியில் ரயில் கடவைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாத்மதுவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (22)

## டெங்கைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

'சுமார் ஆறு மாதங்களாக இந்தப் பகுதியில் ஒரு இலட்சம் கிருமிநீக்கம் செய்யப்பட்ட ஆண் நுளம்புகள் வெளியிடப்பட்டதுடன், மாகாணத்தில் டெங்கு நுளம்புகள் பரவவில்லை என அவதானிப்புகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடர சர்வதேச ஆதரவைப் பெற எதிர்பார்க்கின்றேன்' - என்றும் பேராசிரியர் மேலும் கூறியுள்ளார். (02)

## அரசியல்வாதிகளின் எரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு இதுவரை இழப்பீடு இல்லை

### நாமல் தெரிவிப்பு



2022 மே மாதம் அரசியல் பிரதிநிதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கி சீரழிக்கப்பட்டுள்ள போதும் இந்த ஆட்சி இதுவரையில் அதற்கான இழப்பீட்டை வழங்கவில்லை. நீதியை நிலைநாட்டவில்லை என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

வெலிமடவில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சில அரசியல் கட்சிகள் எம்மைப் பயமுறுத்தி தமக்கான அரசியல் மேடையை கட்டியெழுப்பி வலுப்படுத்த முடியும் என்று கருதுகின்றன. எம்மைப்பயமுறுத்திஅரசியல் மேடையை கட்டியெழுப்ப முடியாது.

மே-9 எமது கட்சியினரை இலக்கு வைத்துத் தாக்கினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீயிட்டார்கள். பேரவாவிக்குள் எமது ஆதரவாளர்களைத் தள்ளினார்கள். இதற்கு எதிர்க்கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும்

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






# ஸ்திரமான அரசைத் தோற்றுவிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்புத் தருவோம்

## எஸ்.எம். சந்திரசேன உத்தரவாதம்

அரசாங்கத்துடன்இணையும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம்.

ஸ்திரமான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்எனஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

தற்காலிக அமைச்சரவைக்குப்பதிலாகநிலையான அமைச்சரவையை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பல முறை வலியுத்தியுள்ளோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 10 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு கட்சி மட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் தீர்மானத்துக்கு அமைய ஆதரவு வழங்குகிறோம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக் கடந்த 07 மாதகாலத்துக்குள் எடுத்த கடுமையான தீர்மானங்களால் நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

மக்களின் அடிப்படை பிரச்சினைகளை வைத்து அரசியல் பிரசாரம் செய்த மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அரசியல் பிரச்சாரத்துக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

மக்கள்விடுதலைமுன்னணியினர் வன்முறையை முன்னிலைப்படுத்தி அரசியல்செய்தார்கள். அவர்களின் அரசியல்பின்னணி கொலை, கடத்தல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியதாக இருந்தது.

மக்கள்விடுதலைமுன்னணியினரின் ஆரம்பக்கட்ட செயற்பாடுகளை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் கருத்துக்கள் கேட்பதற்கு அருமையாக இருக்கும் ஆனால் அக்கருத்துக்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றது.

பயங்கரவாத செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டு செயற்படுவதால் தான் மக்கள் விடுதலை முன்னணியினர் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.



ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் வெகுவிரைவில் அரசாங்கத்துடன் இணைவார்கள். அவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம். ஸ்திரமான அரசாங்கத்தை தோற்றுவிக்க முழுமையான வழங்குவோம் என்றார்.

# 'மாணவர்களின் கல்வியில் விளையாடாதே' சாய்ந்தமருதுவில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

## அதிபரை மாற்றியதைக் கண்டித்து

சாய்ந்தமருதுகமுமழ்ஹருஸ்ஷம்ஸ்மகாவித்தியாலய பழைய மாணவர்கள், பெற்றார், பாடசாலை நலன் விரும்பிகள் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (சனிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம்ஒன்றுபாடசாலை முன்றிலில் இடம்பெற்றது.



இங்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், பிரதான கோரிக்கையாக திருமதி றிப்கா அன்சார் எனும் பெண் அதிபரை, அதிபராய் தொடர்ந்தும் இருக்க வழி விடுங்கள் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இங்கு கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், இந்தப் போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால் முழு பாடசாலை சமூகத்தையும் ஒன்றிணைத்து கல்முனை வலயக் கல்வி அலுவலகம் முன்பாகவும் பாரிய ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என சூளுரைத்தனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர்சங்கஉறுப்பினர்கள்,பெண்கள் எனப் பலரும் இணைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

# சூட்சுமமாகப் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர் கைது

நாட்டின் வெவேறு பகுதிகளில் மிகவும் சூட்சுமமான முறையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட வந்த நபர் ஒருவர் கொழும்பு தெற்கு ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டாரவளை, நுவரெலியா, ஹப்புதளை, கிருலப்பனை, இரத்மலானை மற்றும் பிலியந்தலை போன்ற பகுதிகளில் நபர் ஒருவர் கையடக்க தொலைபேசி மூலம் பணம் பெற்று போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார் எனக் கொழும்பு தெற்கு ஊழல்தடுப்புபிரிவுக்குதகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்படி, குறித்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 31 வயதுடைய நபர் கிருலப்பனையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.



போதை பொருளை கொள்வனவு செய்பவர் பணத்தை செலுத்திய பின்னர் அதனை விற்பனைசெய்பவர் போதைப்பொருளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து பின்னர் அந்த இடத்தை புகைப் படம் எடுத்து அதனை வட்ஸ் அப் மூலம் கொள்வனவு செய்பவருக்கு அனுப்பி அதனை பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் கையடக்கத்தொலைபேசி பரிசோதனை உட்படுத்திய போது குறித்த நபர் மற்றுமொரு நபரிடமிருந்து போதைப்பொருள் கொள்வனவு செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் போதைப் பொருளைக் கொள்வனவு செய்வதற்கு தயாராக இருந்த தரப்பினருக்கு விற்பனை செய்வதற்காக தம்வசம் வைத்திருந்த சுமார் 1,450 ஹெரோயின் போதைப் பொருள்அடங்கியபொதிகளும், சந்தேக நபர் மூலம் போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறியொன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொழும்பு தெற்கு ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர்களின் தலைமையில் நடக்கட்டும்

கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து புதிய பயங்கரவாத எதிரப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதை ஒத்திவைக்க ஆட்சியாளர்கள் தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியபோதும், அது ஒரு தற்காலிக நடவடிக்கையே என்று தெரிகின்றது. இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்திக்கு எப்போது கொண்டு வருவது என்பது தொடர்பில் ஆட்சித் தரப்புக்குள் இருந்து இருவேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. சித்திரைக் கடைசியில் அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று தலைமை அமைச்சர் டினேஸ் குணவர்த்தன தெரிவித்திருந்தார். ஆனால் அதனை சித்திரை இரண்டாம் வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்போவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விவகாரத்தைக் கையாள்பவர் என்கிற ரீதியில் அமைச்சர் விஜயதாச கூறிய தகவல்கள் சரியாகவும் இருக்கலாம். ஆனால், நாடாளுமன்றத்தில் தான் இந்தச் சட்டமூலத்தை முன்வைப்பதற்குத் திட்டமிட்ட காலப் பகுதியிலிருந்து அது பின்தள்ளிப் போகிறது என்ற சாரப்படத்தான் நீதி அமைச்சர் அண்மையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதாவது சித்திரை முதல் வாரங்களில் இருந்து இப்போது கடைசி வாரத்திற்கு அல்லது வைகாசி முதல் வாரத்திற்கு இந்த விவகாரம் பின்தள்ளப்படுகின்றது என்கிறார் அமைச்சர். தொடக்கத்திலேயே அந்தப் காலப் பகுதியில்தான் சட்டமூலம் நாடாளுமன்றத்திற்கு வரும் என்று தலைமை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இப்போது ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் வைகாசி முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று நீதி அமைச்சர் அறிவித்திருப்பதால் சித்திரைக் கடைசி வாரத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றம் வருவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது. அப்படி வருகின்றபோது நாடாளுமன்றத்தில் தனக்கிருக்கும் பெரும்பான்மைப் பலத்தை வைத்து அந்தச் சட்டமூலத்தை சில அற்பத் திருத்தங்களுடன் ஆட்சியாளர்கள் நிறைவேற்றிக்கொள்ள அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியங்களைக் கோடிட்டுக்காட்டியிருந்தார். இந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றாலும், அதன் சில சரத்துக்களை இலகு பெரும்பான்மையுடனும் வேறு சிலவற்றை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனும் நிறைவேற்றிக்கொள்ளச் சொல்லி நீதிமன்றம் கூறக்கூடும். அப்படியான சந்தர்ப்பத்தில் ஆட்சியாளர்களுக்கு அது சாதகமாகவே அமையக்கூடும் என்றி விளக்கியுள்ளார் அவர். அதனால் நீதிமன்ற நடவடிக்கைகளையும் தாண்டிய நடவடிக்கைகள் இந்த விடயத்தில் அவசியம் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

அதுஉண்மையும்கூட, இந்தப்பயங்கரச்சட்டத்தைஅடியோடு ஒழிக்கவேண்டியது மிகமுக்கியதேவை. மனித உரிமைகளை மதிக்காத, அடக்குமுறைக்கும் சர்வாதிகாரத்திற்கும் வழியேற்படுத்திக்கொடுக்கின்றன இத்தகைய சட்டங்கள் நாகரிக சமூகத்திற்குப் பொருத்தமற்றவை. எனவே அவை முற்றிலுமாக அகற்றப்படுவது அவசியம். இத்தகைய சட்டத்தால் கடந்த 40 வருடங்களாகப் பெரும் பாதிப்பை அனுபவித்தவர்கள் என்ற வகையில் இந்த எதிர்ப்புப் போராட்டத்திற்கு தமிழர்கள் தலைமையேற்று வழிநடத்திச் செல்வது குறித்தும், இந்தச் சட்டத்தை எதிர்க்கும் சிங்களத் தரப்புக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு இதில் வெற்றியடைவது குறித்ததும் சிந்திப்பது அவசியம்.

எப்படியாக இருப்பினும் பயங்கரவாதம் தொடர்பான சிறப்பு அதிகாரச் சட்டங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு, தேவைப்படின் சாதாரண சட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்து பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த ஆட்சியாளர்கள் முயலவேண்டும்.

# பொருத்தமற்ற விடயங்கள் இருப்பின் மேன்முறையீடு

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து மைத்திரி**



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அதில் நாட்டுக்கு பொருத்தமற்ற விடயங்கள் காணப்பட்டால், அதற்கான திருத்தங்களை மேன்முறையீடு செய்ய தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மே தினக் கூட்டம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் கொழும்பில் உள்ள சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு தொடர்ந்தும் பதிலளித்த அவர் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதான மேதினக்கூட்டம் இம்முறை கண்டி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. பாரியளவிலான ஆதரவாளர்களை இந்தக் கூட்டத்தில் பங்குபற்றச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் அரசாங்கம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவால் தீர்க்கப்படவேண்டிய விடயமாகும். எம்மால் எதனையும் செய்ய முடியாது.

அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் எமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவோம்.

குறித்த சட்டமூலத்தில் நாட்டுக்கு பொருத்தமற்ற விடயங்கள் காணப்பட்டால், அதுதொடர்பாக திருத்தங்களை மேன்முறையீடு செய்வோம். மேற்படி சட்டமூலத்தில் காணப்படும் விடயங்கள் தொடர்பில் முழுமையாக ஆராயாமல், அதனை முழுமையாக எதிர்ப்பதா, இல்லையா என்பதைக் கூற முடியாது. சுதந்திர கட்சியின் சட்டத்தரணிகள் குழாமிடமிருந்து இது தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்றபின்னரே எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம். என்றார்.

# எமது கொள்கைக்கு இணக்கமானவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்

**இப்படிக் கூறுகிறார் சாகர**

கட்சி மட்டத்தில் சகல தரப்பினருடன் கலந்தாலோசித்து எமது கொள்கைக்கு இணக்கமானவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எவ்வித பேச்சுகளும் உத்தியோகபூர்வமாக இடம்பெறவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என ஆளும் தரப்பின் ஒருசிலர் தங்களின் தனிப்பட்ட நிலைப்பாட்டைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதனை கட்சியின் நிலைப்பாடாகக் கருத முடியாது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் சகல தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கட்சி மட்டத்தில் எவ்வித பேச்சுகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சி மட்டத்தில் விரிவான பேச்சில் ஈடுபட்டு எமது கொள்கைக்கு இணக்கமானவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். ஜனாதிபதி வேட்பாளர் தெரிவின் போது அவதானத்துடன் செயற்படுவோம்.

பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டமூலம் தொடர்பில் ஒருதரப்பினர் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துகிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் கலவரம், விடுதலை புலிகளின் 30 வருடகால யுத்தம், முஸ்லிம் அடிப்படைவாதம் என பல பிரச்சினைகளை நாடு எதிர்கொண்டுள்ளது.



ஜனநாயகப் போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு பயங்கரவாத செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டன. தொழிற்சங்கங்களின் முறையற்ற கோரிக்கைகளுக்கு அடிபணிந்தால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமூலம் சட்டமாக்கப்பட வேண்டும். - என்றார்.

# விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பேராசிரியர்கள் விரைவில் இணைவார்கள்

**கல்வி அமைச்சு நம்பிக்கை**

அனைத்து அரச ஊழியர்களுக்காகவும் பொதுவாக விதிக்கப்பட்டிருக்கும் வரி விடயம் தவிர, ஏனைய கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சும் , நிதி அமைச்சும் இணக்கப்பாட்டுடன் மாற்று தீர்வு வழங்கி இருப்பதால் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கமும் உயர்தர மாணவரின் விடைத்தாள் மதிப் பீட்டு நடவடிக்கையில் இணைந்து கொள்வதற்காக விரைவாக பதில் வழங்குவர் என்பது இலட்சக்கணக்கான மாணவர்கள் , பெற்றோர் மற்றும் கல்வி அமைச்சின் எதிர்பார்ப்பாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தொடர்பாக ஆசிரியர் சங்கம் ஒன்றால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்து, ஊடகங்களில் பிரசுரமான விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடைத்தாள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பப்படிவம் கோரும் போது, அதற்காக மொத்த தேவையாக இருந்த 19 ஆயிரம் மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கையில் 12 ஆயிரம் பேரே விண்ணப்பித்திருந்தனர்.

இந்த நிலைமையை உணர்ந்துகொண்ட கல்வி அமைச்சர், ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, விடைத்தாள் மதிப்பீட்டுக்கு வழங்கப்படுகின்ற கட்டணத்துக்கு மேலதிகமாக நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டுவந்த 500 ரூபா கொடுப்பனவை 2ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கும் 81 கிலாஹி மீட்டருக்கு அதிக தூரத்தில் இருந்து விடைத்தாள் மதிப்பிடுவதற்கு வரும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை 2900ரூபா வரைஅதிகரிப்பதற்கும்தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருந்தார் அதற்காக திறைசேரியிடமிருந்து மேலதிக ஒதுக்கீடுகளையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.

அத்துடன்பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் கடந்த மாதம் 3ஆம் திகதி முதலாவது கலந்துரையாடல் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் திறைசேரி அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்பிரகாரம்அனைத்து அரச ஊழியர்களுக்காகவும் பொதுவாக விதிக்கப்பட்டிருக்கும் வரி விடயம் தவிர, ஏனைய கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டவிடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு, நிதி அமைச்சும் இணக்கப்பட்டுடன் மாற்றுதீர்வுவழங்கி இருப்பதுடன் அதுதொடர்பாக பல்கலைக்கழக பேராசிரியர்கள்சங்கத்துக்கும்அறிவிறுத்தி இருக்கிறது.

அத்துடன் இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலாக ஊடக அறிக்கை ஊடாக அறிவுறுத்தப்பட்டது.

கல்வி அமைச்சு இந்த முக்கியமான பிரச்சினை தொடர்பாககல்விபொதுத்தராதர உயர்தர பரீட்சை ஆரம்பத்தில் இருந்தே ஆசிரிய தொழிற்சங்கம்மற்றும்பல்கலைக்கழக பேராசிரிய சங்கங்களும் பல சுற்று பேச்சுகளை நடத்தி தீர்க்கமான நடவடிக்கைக்கு வந்துள்ளதுடன் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக தற்போது ஆசிரிய தொழிற்சங்கம் முன்னேற்றகரமான பதிலொன்றை வழங்கி இருப்பதுடன் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கமும் விடைத்தாள் மதிப் பீட்டு நடவடிக்கையில் இணைந்து கொள்வதற்காக விரைவாக பதில்வழங்கும்என்பதுலட்சக்கணக்கான மாணவர்கள் உட்படபெற்றோர்மற்றும்கல்வி அமைச்சின் எதிர்பார்ப்பாகும்


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய சட்டத்தை எதிர்த்தால் இருக்கும் சட்டமே நீடிக்கும்

## எச்சரிக்கிறார் நீதியமைச்சர் விஜயதாஸ

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக்கொண்டுவருகின்றோம். அவ்வாறிருக்கையில், இந்தப் புதிய சட்டம் வேண்டாம்என்றுகூறிஎதிர்ப்பு வெளியிட்டால், ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்துஅமுலில்இருக்கும் நிலையேற்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில்பெரும்எதிர்ப்பலை தோற்றம்பெற்றுள்ள நிலையில், அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தாமதிக்கப் போவதாகக் கடந்த வாரம் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் அவசியமானதிருத்தங்களை மேற்கொள்வதற்குத்தயாராக இருக்கின்றீர்களா? என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் குறைகூறுகின்றஅனைவரும்அதன் ஒருசிலகூறுகளைமாத்திரமே சுட்டிக்காட்டிப்பேசுகின்றனர். மாறாக, அந்தச் சரத்துக்களின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்துகொண்டதன் பின்னர், அதில்என்ன குறைபாடுஇருக்கின்றது என்பது பற்றி யாரும் கூறவில்லை என்று விசனம் வெளியிட்டார்.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டுவருகின்றோம். அவ்வாறிருக்கையில், இப்புதிய சட்டம் வேண்டாம் என்றுகூறி எதிர்ப்பு வெளியிட்டால், ஏற்கனவேநடைமுறையில்உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



இந்நிலையில் 'இப்புதிய சட்டமூலத்தை எதிர்ப்பவர்கள் நீதிமன்றத்தை நாடலாம். அதனைத் தொடர்ந்து அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எனவேநாம் எதனையும் அரசமைப்புக்கு முரணானவகையில் செய்ய மாட்டோம்' எனவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உறுதியளித்தார்.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் குழப்பம்

## ஜனாதிபதிக்கு முறைப்பாடு

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்கவுடன் இணைந்து பணியாற்ற முடியாது எனக் குறிப்பிட்டு, ஆணையாளர்கள்மூவரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர்தினேஷ்குணவர்தன, நீதி அமைச்சர் விஜேதாஸராஜபக்ஷஉள்ளிட்டோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையாளர்களான கலாநிதி விஜித நாணயக்கார, கலாநிதி நிமால் கருணாசிறி மற்றும்கழுபஹணபியரத்ன தேரர் ஆகியோர் கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்துக்கு முரணாக செயற்படுகிறார் எனவும், ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை செவிமடுக் காது தன்னிச்சையாக அவரது விருப்பத்துக்கமைய செயற்படுகிறார் எனவும் அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆணைக்குழுவின் பெரும்பான்மைஉறுப்பினர்கள்எடுக்கும்தீர்மானங்களைத் தொடர்ச்சியாக உதாசீனப்படுத்தி அவர் செயற்படுகின்றமையால், கடந்த பெப்ரவரி மாதம் முன்வைக்கப்பட்ட ஆணைக்குழுவின் யோசனைக்கு மார்ச் மாதமாகியும் அனுமதி வழங்கப்படவில்லைஎன்றும்அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

ஆணைக்குழுவின்தலைவர் ஏனைய உறுப்பினர்களின் குரல்களை செவிமடுக்காமையின் காரணமாக, அவரால் எடுக்கப்படும் எந்தவொருதீர்மானத்துக்கும் அனுமதிவழங்காதிருப்பதற்கு ஏனைய உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அவர் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உயர் பதவியை இலக்காகக் கொண்டே இவ்வாறு செயற்படுகிறார் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பாக உடனடியாக அவதானம் செலுத்துமாறு ஆணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருடன் உறுப்பினர்கள் ஐவர் காணப்படுவதோடு, அவர்களில்மூவர் இவ்வாறு தமது கையெழுத்துடன் கடிதம் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு யார் காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்


## சகோதரர்களை இழந்த பிரிட்டிஷ் பிரஜை தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தனது இரு சகோதரர்களை இழந்த பிரிட்டிஷ் பிரஜையொருவர்தான் இந்த சம்பவத்துக்கு யார் உண்மையில் காரணம் என்பதை அறிய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஒருபோதும் விடைகள் கிடைக்காது எனத் தெரிவித்துள்ள டேவிட் லின்சே சங்கிரி லா ஹோட்டல் குண்டுவெடிப்பில்உயிரிழந்த தனது சகோதரங்களின் பெயரால் இலங்கை மக்களுக்கு ஏதாவது செய்ய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முழுமையான விசாரணைகள் இடம்பெறவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான் உண்மையை அறிய விரும்புகின்றேன் அவ்வளவுதான். நான் அரசியல்வாதியோ நீதிபதியோ அல்லன் எனக் குறிப்பிட்டுள்ளஅவர்உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பாக முழுமையாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.



அதுவரை எதிர்வுகூறல்கள் சாத்தியமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர் மிதிகமவில் கொலை; இருவர் கைது!

மிதிகமவில் சுற்றுலா ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் ஒருவரை அவரது ஹோட்டலுக்கு முன்பாக துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டு கொலை செய்வதற்குஉதவியஇரண்டு சந்தேக நபர்கள் விசேட அதிரடிப்படையின் தெற்கு விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது கிடைத்த இரகசிய தகவலின்பேரில் கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் 13 கிராமுக்கு அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா ஹோட்டல் உரிமையாளரான தொடம்கொடவைச் சேர்ந்த பெசிந்து சந்தருவன் (வயது - 31) என்பவர் உயிரிழந்தவராவார்.




## புத்தாண்டு வாழ்த்துக்களுடன்

# மஹிந்தவை நேரில் சந்தித்த சீனத் தூதர்



சீனாமற்றும்இலங்கைக்கிடையிலான பாரம்பரிய நட்பை வலுப்படுத்தல் மற்றும் பல்வேறு துறைசார் பரிமாற்றங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்குக்கும் இடையிலான சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்-சிங்களசித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் முன்னாள் ஜனாதிபதியைச் சீனத் தூதுவர் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பின் போதே மேற்படி விடயங்கள் தொடர்பில்அவதானம்செலுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் பயங்கரவாதச்செயற்பாடுகள், போருக்குப் பின்னரான மறுசீரமைப்பு, கொரோனாத் தொற்று நோய்க்கு எதிரான போராட்டம்போன்றஅனைத்து முக்கியமான தருணங்களிலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும் இலங்கைக்கு மிகவும் மதிப்புமிக்க உதவிகளைத் தொடர்ந்து வழங்கியதற்காக சீன அரசுக்கும் மக்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்தச் சந்திப்பின்போதுஇருநாடுகளுக்கும் இருநாட்டுமக்களுக்கும்இடையிலான பாரம்பரிய நட்பை ஆழமாக்குதல், பல்வேறு துறைகளில் பரிமாற்றங்கள், ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பொதுவான நலன்கள் தொடர்பான விடயங்கள் குறித்து பரந்தளவில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன என்றும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (02)

# 5 துப்பாக்கிகளுடன் நால்வர் கைதாகினர்!

உகன, அம்பன்பொல, கிளிநொச்சி மற்றும் மல்லாவி பொலிஸ் பிரிவுகளில் 5 துப்பாக்கிகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் நால்வர் சந்தேகத்தின் பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு சந்தேக நபர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர், அவர்கள் அந்தந்த பிரதேசங்களின் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நிறைவேற்றும் முயற்சியை அரசு விடவில்லை!

## காவிந்த தெரிவிப்பு



எதிர்க்கட்சிகள் , சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புக்களால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அரசாங்கம் சற்று ஒத்தி வைத்துள்ளதே தவிர , அதனை நிறைவேற்றும் முயற்சிகளைக் கைவிடவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்குப் பல்வேறு தரப்பினரால் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளமையால் அரசாங்கம் அதனை சற்று ஒத்தி வைத்துள்ளதே தவிர , அதனை நிறைவேற்றும் முயற்சியைக் கைவிடவில்லை.

அரசியல் கட்சிகள் , சிவில் சமூக அமைப்புக்கள் , தொழிற்சங்கங்கள் உள்ளிட்டவற்றை தடை செய்வதே இதன் நோக்கமாகும். இதன் ஊடாக அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாகவே அடையாளப்படுத்தப்படுவர்.

உண்மையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதெனில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

மாறாக, நாட்டை வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டு சென்ற அஜித் நிவாட் கப்ரால் போன்றவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக , அவர்களுக்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்று ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்துக்கு எதிரான சதியாக சித்திரிக்கப்படுகின்றன. மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான காரணமும் அரசாங்கமே.

எவ்வாறிருப்பினும் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வை வழங்கும் மாற்று அரசாங்கமாக ஐக்கிய மக்கள் சக்தி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அடுத்து நாட்டை பொறுப்பேற்கவுள்ள தலைவராக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அந்த பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாம் தயாராக இருந்த போதிலும் , அரசாங்கம் அதனை முறியடித்துள்ளது. - என்றார்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் போன்ற சம்பவங்களுக்கு இனி இடமில்லை!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



ஈஸ்டர் தாக்குதல் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு செல்வாக்கும் இன்றி தாக்குதல் தொடர்பாக சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய அரசியல் இலக்குகள் மற்றும் பின்தங்கிய போக்குகளிலிருந்து விலகி நாட்டைக் கட்டியெழுப்பும் பொது வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்க்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

# குருநகரில் நால்வர் கைது

## கூட்டுவன்புணர்வுக் குற்றச்சாட்டில்

பதிம்ம வயதுச் சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான மற்றொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப் பட்டு ஏற்கனவே சிறையில் உள்ளார் என்று பொலிஸார் கூறினர்.


யாழ். நகரை அண்டிய கரையோரமுள்ள குருநகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியும் குற்றச்சாட்டப்பட்டவர்களும் அதே இடத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய 19 வயது முதல் 26 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களால் சிறுமி நீண்ட காலமாகக் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு வந்தார் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் வேலைக்கு சென்றிருந்த வேளைகளிலேயே சந்தேகநபர்கள் இந்நச் செயலைச் செய்துள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியும் சந்தேகநபர்களும் மருத்துவ பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப் பட்டுள்ளனர்

# அங்கஜனின் ஈஸ்டர் வாழ்த்து



இயேசு பிரானின் போதனைகள் உலகமக்கள் அனைவரும் நெருக்கடிகளில் இருந்து மீண்டெழ வழிகாட்டும் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்-நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

புனித உயிர்ப்புப் பெருவிழா தினத்தை முன் னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இயேசு கிறிஸ்து மக்களின் பாவங்களையும்-துன்பங்களையும் -பிணிகளையும் சுமந்து சிலுவையில் மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்த புனிதநாளை நினைவு கூரும் முகமாக உலக வாழ் கிறிஸ் தவ மக்களால் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மனித இனத்தை பாவங்களில் இருந்து விடுவிப்பதற்காக தனது வாழ்வை அர்ப்பணித்த இயேசுநாதரின் உயிர்ப்பு நாள் ,நாட்டு மக்கள் பொருளாதாரமற்றும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து மீட்சி பெறும் நன்நாளாக அமைய இயேசுபிரான் வழிகாட்டுவார் என நம்புகிறேன்.

கடந்த சில வருடங்களாக ஈஸ்டர் தாக்குதல்,கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என உயிர்ப்புப் பெருவிழாவை மகிழ்வுடன் கொண்டாட முடியாத நிலை காணப்பட்டது.

இம்முறை நெருக்கடிகளில் இருந்து சிறிதளவு மீண்டு ஒவ்வொருவரும் மீண்டும் உயிர்ப்புப் பெறும் நிலையில் இந் நன்நாளை கொண்டாடுகிறோம். அந்த வகையில் அனைத்து கிறிஸ் தவ மக்களுக்கும் எனது மனமார்ந்த உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.என மேலும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

# மத்திய வங்கி ஆளுநர் மீது ஜே.வி.பி. தலைவர் பாய்ச்சல்

(தன்வீன்)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அப்பதவியில் அமர்ந்தமையானது, நாட்டின் பொருளாதாரத்தினை சர்வதேசநாணயநிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டுசெல்வதற்காகவே என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மகரகமவில் உள்ள இளைஞர் வலுவூட்டல் மன்ற அரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்க 2021ஏப்ரல் 8 நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பதவியேற்றவுடன் எடுத்த முதலாவது தீர்மானம், இலங்கை அரசு வெளிநாட்டில் பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதில்லை என்ற இறுக்கமான முடிவாகும்.

எந்தவொரு நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநரும் தான் பதவியேற்ற முதல் நாளிலேயே இவ்வாறான தீர்மானமொன்றை எடுக்கமாட்டார். ஆனால் எமது நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் அந்தத் தீர்மானத்தினை எடுத்தார்.

இதன் மூலமாக, அவரது தீர்மானத்திற்கு பின்னணியொன்று உள்ளது என்பதை உங்களால் உணர முடியாதிருக்கின்றதா? அதுமட்டுமல்ல, அரசமைப்புக்கு அமைவாக நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது. இதில் யாரும் கை வைக்கவே முடியாது.

அவ்வாறிருக்கையில், அமைச்சரவையின் அனுமதி இன்றியும், நாடாளுமன்றத்தின் இணக்கப்பாடு இன்றியும் மத்திய வங்கியின் ஆளுநர் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தப்போவதில்லை என்ற தீர்மானத்தினை எடுத்திருந்தார். மத்திய வங்கி ஆளநர் நந்தலால் வீரசிங்க நேரடியாகவே அரசமைப்பை மீறுகின்றார் என்று நான் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினோம்.

எவ்வாறாயினும், வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த முடியாது என்ற தீஜுமானம் எடுக்கப்பட்ட நிலையில் அதன் அடுத்த கட்டம் சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அதன் கடனைப் பெறுவதாகும். வேறெந்த தெரிவுகளும் அப்போது இருந்திருக்கவில்லை.

இந்தச் சமயத்தில் இந்திய அரசு, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியன கடன்களை வழங்கிய போதும் அவற்றை மீளப்பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்தான் அவற்றை அளித்திருந்தன.

ஆகவே, சர்வதேச நாணய நிதியத்துடன் நாட்டை ஐக்கியமாக்குவதற்காகவே இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் நந்தலால் வீரசிங்க அமர்ந்தார் என்ற விமர்சனங்களும் உள்ளன - என்றார்.



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS













**INCLUSION**

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2023 இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 25 சனிக்கிழமை 08.04.2023 கதிர் 22

## குளவி கொட்டியதில் 10 பெண்கள் பாதிப்பு

### காப்பாற்றச் சென்ற இளைஞரும் வைத்தியசாலையில்



பசறையில் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பசறை - கோணக்கலை தோட்ட கீழ்ப் பிரிவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பெண் தொழிலாளர்கள்

2

## பந்துலவுடன் படம் பார்த்த மஹிந்தர்



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் தயாரிப்பில் 'சகோ' என்ற திரைப்படம் உருவாக்கப் பட்டது.

இந்தத் திரைப்படம் நேற்று 'வன் கோல்பேஸ்' திரையரங்கில் விசேட காட்சியாகக் காண்பிக்கப்பட்டது.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன உள்ளிட்ட பல பிரமுகர்கள் அமைச்சருடன் திரைப்படத்தைப் பார்த்தனர். (02)

# ராஜிதவை வெளியேற்ற சஜித் அதிரடி தீர்மானம்



### கட்சியின் எம்.பிக்கள் அமைப்பாளர்கள் அழுத்தத்தை அடுத்து நடவடிக்கை

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவைக் கட்சியிலிருந்து நீக்குவது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முடிவு செய்துள்ளார்.

கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களிடம் இருந்து தொடர்ச்சியாகக் கிடைத்த அழுத்தங்களை அடுத்து அவர் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளார்.

அண்மைக் காலமாக தனக்கு சுகாதார அமைச்சுப் பதவி தரப்பட்டால் தான் தற்போதைய ஆட்சியில் இணைந்து கொள்வார் என்று அடிக்கடி சொல்லி வந்தார்.

அதன் உச்சமாக வியாழக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசும்போதும் அவர் இதனைத் தெரிவித்தார்.

2

# தமிழ் – சிங்கள மீனவர்கள் மோதல்: விரிவான விசாரணை நடத்தப்படும்

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



திருகோணமலையில் தமிழ் – சிங்கள மீனவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருக்கடலூர் மற்றும் அதனை அண்டிய விஜிதபுர ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 6 மீனவர்களும் திருகோணமலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மீனவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்குவலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். அயல் கிராமத்தைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுருக்கு வலையைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கூறியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் இரு தரப்புக்களுக்கிடையிலும் வாய்த்தர்க்கம் முற்றி, கரையோரத்தில் மோதலாக வெடித்துள்ளது.

இரண்டு தரப்பினரும் கற்கள், கொட்டான்களால் தாக்கிக்கொண்டனர். இரண்டு தரப்பிலும் தலா 3 பேர் வீதம் 6 பேர் காயமடைந்தனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த 6 பேரும், விஜிதபுர பகுதியைச் சேர்ந்த 3 பேரும் என 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எஸ்.ஹஹிர் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை திர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (02)

## காலநிலை மாறத்தால் கட்டுநாயக்கா பாதிப்பு

### விமானங்கள் வருகை, புறப்பாடு தாமதம்



கடும் மழையுடனான காலநிலை காரணமாக, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் மற்றும் விமான நிலையத்துக்கு உள்வரும் சில விமானங்களின் பயணங்கள் தாமதமடைந்தன.

இன்று அதிகாலை 4.45 மணிக்கு, டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைய இருந்த ஷீஸி226 என்ற விமானம், இன்று மாலை 4.55 மணிக்கு நாட்டை வந்தடைந்துள்ளது.

அத்துடன், நேற்றிரவு 7 மணிக்கு, ஜப்பான் நோக்கிப் புறப்படவிருந்த விமானம் ஒன்று, இன்று அதிகாலை 1.50 மணிக்குப் புறப்பட்டுள்ளது.

நேற்றிரவு 11.40 மணிக்கு மும்பை நோக்கிப் புறப்படவிருந்த விமானம் ஒன்று, இன்று அதிகாலை 5.35 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இதேநேரம், சீனாவில் இருந்து வந்த எம்.எல். 231 என்ற விமானம் மாலைதீவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், குவைத்தில் இருந்து வந்த யு.எல். 230 என்ற விமானம் மத்தள விமான நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால், 15 மணித்தியாலங்கள் தாமதமாகி டுபாய் நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இன்று காலை மீளவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

2

# புத்தளத்திற்குக் கடத்தப்பட்ட 114 ஆடுகள் நேற்றிரவு மீட்பு



யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளத்திற்கு கடத்தப்பட்ட 114 ஆடுகளைத் தாம் மீட்டுள்ளதுடன் அதனைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் கீழ் மூன்று பேரைக் கைதுசெய்துள்ளனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ-9 வீதி, ஊடாக பாரவூர்தி ஒன்றில் ஆடுகளை அடைத்து புத்தளம் பகுதிக்குக் கொண்டு சென்றவேளையில் மீசாலை பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் பாரவூர்தி மாட்டியது.

மூடிய வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 112 மறி ஆடுகளும், 2 கடாய் ஆடுகளும் பொலிஸாரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

வாகன சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் இரு தினங்களுக்கு முன்பாக ஆடுகள், மாடுகள் என்று 23 கால்நடைகள் மீட்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் ஆடுகள் கடத்தல் இடம்பெற்றிருக்கின்றது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு செல்லும் வாகனங்கள் சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த ஆட்டுக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஆடுகள் மாட்டியவுடன் சந்தேகநபர்களில் ஒருவர் கடமையில் இருந்த பொலிசாருக்கு லஞ்சம் கொடுத்துதப்பிக்க முற்பட்டனர் என்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சாஜன் தர அதிகாரி 50,000 ரூபாய் லஞ்சத்தினை வாங்க மறுத்துள்ளதோடு நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளையும் சந்தேகநபரையும் கைதுசெய்துள்ளார். கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், மீட்கப்பட்ட ஆடுகளை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பள்ளிவாசல் நிர்வாகம் குறித்த கைகலப்பில் ஒருவர் கொலை

### சம்மாந்துறையில் நால்வர் கைது



சம்மாந்துறை பிரதேசத்தில் பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகத் தெரிவு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப் பாகி இரண்டு குழுக்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மலையடி கிராமத்தைச் சேர்ந்த 65 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாக சபைக் காலம் முடிந்த நிலையில் வெள்ளிக் கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றிய ஒரு குழுவினர் பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தைத் தெரிவு செய்யலாம் என்றனர். மற்றொரு குழுவினரோ ஓரிரு தினங்களுக்குள் நிர்வாகத் தைத் தெரிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதங்களின் பின்னர் நாளை ஞாயிற்றுக்கிழமை புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வது என முடிவு செய்யப்பட்டுக்கூட்டம் முடித்து வைக்கப்பட்டது. கூட்டம் முடிந்து வெளி யேறிவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து தொடர்ந்தும் வாக்குவாதப்பட் டனர். அது முற் றிய கைகலப் பாக மாறியது. இதில் ஒருவர் கொல்லபட்டார். சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் சம்மாந்துறைப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் நேற்று மதியம் வரை நால்வரைக் கைது செய்திருந்தனர். (02)

# வாகன விபத்தில் மாணவன் இறப்பு

### மாத்தளையில் ஒருவர் சாவு; 8 பேர் வைத்தியசாலையில்

மாத்தளையில் உள்ள பாடசாலை ஒன்றில், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர் குழு ஒன்று பயணித்த, கப் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தளை - தொட்டகமுவ பகுதியில் இன்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, 9 மாணவர்கள் காயமடைந்த நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களுள் பலாபத்வல பகுதியைச் சேர்ந்த 19 வயதான மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று

2

# மாவீரர்களின் விபரங்களை வெளியிடுவது தொடர்பில் அச்சமடையும் பொலிஸ் தரப்பு

## சுயாதீன ஊடகவியலாளர் சனத்திடம் இரு மணித்தியாலங்கள் விசாரணை

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் மரணித்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் புகைப்படங்கள் மற்றும் பெயர்களை ஊடகங்களில் வெளியிடுவது அந்த அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப ஊக்குவிக்கும் செயற்பாடு என்று பொலிஸார் அச்சம் வெளியிட்டுள்ளனர். அதுவும் 5 வருடங்களுக்கு முன்னர் இடப்பட்ட பதிவி தொடர்பில் இப்போதும் பொலிஸார் அச்சமடைகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடி உயிரிழந்த மலையகத் தமிழ் மக்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய கட்டுரை தொடர்பாக சுயாதீன ஊடகவி-யலாளரிடம் கேள்வி எழுப்பிய போது பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு இந்த அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் இராமச்சந்திரன் சனத்தை, நுவரெலியா பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இம்மாதம் 6ஆம் திகதி அழைத்து, இரண்டு மணித்தியாலங்கள் விசாரணை நடத்தினர்.

மலையகத் தமிழர்களின் தேசியத்தை அங்கீகரித்து அவர்களுக்கு காணி உரிமை வழங்கக் கோரி தலைநகரில் கிதுசர குழுவினர் போராட்டம் நடத்திய தினத்தன்று, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், முன்னாள் நாடாளுமன்ற ஊடகவியலாளர் இராமச்சந்திரன் சனத்திடம் இந்த விசாரணையை நடத்தினர்.

விசாரணைகளின்போது சித்திரவதைகளைப் பயன்படுத்துவதில் பெயர் பெற்ற முன்னால் பயங்கரவாத விசாரணைப் பிரிவு என அழைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஊடகவியலாளரை வரவழைத்தமை அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என உலகளவில் மனித உரிமை ஆர்வலர்களின் பாதுகாப்புக்காகச் செயற்படும் சர்வதேச அமைப்பு கண்டித்துள்ளது.

இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் அது தொடர்பான வழிமுறைகள் வரலாற்று ரீதியாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், இராமச்சந்திரன் சனத்தை விசாரணைக்கு அழைத்தமை அவரது பாதுகாப்பு குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புகின்றது. மனித உரிமைப் பாதுகாவலர்கள், அமைதியான போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவி-யலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து தொடர்ந்து செய்திகள் வெளியாகின்றன. அவர்கள் மனித உரிமைகளை ஊக்குவிக்கவும் ஊழலை வெளிக்கொண்டு வரவும் அவர்கள் முயற்சிப்பதே இதற்கு காரணம் எனத் தோன்றுகின்றது. முயற்சிப்பதால்தான் இது தெரிகின்றது – என்று டப்ளினை தளமாகக் கொண்ட புரன்ட் லைன் டிபென்டர்ஸ் (Frontline Defenders) அமைப்பு கூறியுள்ளது.

இராமச்சந்திரன் சனத்தை அழைப்பதற்கு வழிவகுத்த ஊடக செய்தி குறித்து கேள்வி எழுப்பிய விசாரணை அதிகாரிகள், முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் புகைப் படங்களை வெளியிடுவது, அமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் போராடுவதற்கும் தனிநபர்களிடையே சிந்தனையை உருவாக்கும் என்று கூறியுள்ளனர்.

தாம் தெரிவித்த தகவல்கள் வேறொரு இணையத் தளத்தில் இருந்து எடுக்கப்பட்டவை எனப் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளிடம் தெரிவித்த ஊடகவியலாளர் சனத், ஏனைய ஊடகங்கள் இன்னமும் முன்னாள் புலி உறுப்பினர்களின் புகைப்படங்களைப் பயன்படுத்தி வருகின்றன என்பதையும் அது பயங்கரவாத நடவடிக்கையாகக் கொள்ளப் பட முடியாதது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையகத் தமிழ் மக்களின் காணி உரிமை மற்றும் சம்பளப் போராட்டத்துக்காகக் குரல் கொடுத்து வரும் ஊடகவியலாளர் இராமச்சந்திரன் சனத்திடம், 'பச்சை தங்கம்' வலைத்தளத்தை நடத்துவதற்கு வெளிநபர்களிடம் இருந்து நிதி உதவி கிடைக்கின்றதா எனவும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.




ஊடகத்துறையின் பணியால் ஊடகவி-யலாளர்கள் துன்புறுத்தப்படுவது இது முதன் முறையல்ல.

இலங்கையில் வாழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் மற்றும் காணி உரிமைக்கான கோரிக்கைகளை ஊடகங்களில் வெளியிட்டமைக்காக இராமச்சந்திரன் சனத் குறிவைக்கப்பட்டு அவதானிக்கப்பட்டார்.

2021 பெப்ரவரியில் ஒரு ஊதிய வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற பின்னர், அவர் துன்புறுத்தல் மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டார்.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் எனக் கூறிக்கொள்ளும் அடையாளம் தெரியாத நபர்கள் 2021 மார்ச் மற்றும் மே மாதங்களில் அவரது வீட்டுக்குச் சென்று அவரது இருப்பிடம் மற்றும் செயற்பாடுகள் குறித்து விசாரித்தனர்.

மனித உரிமை ஆர்வலரான சனத் இந்தத் துன்புறுத்தலுக்குப் பதிலளிக்கும் வகையில் 2021 மே 25 ஆம் திகதி பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் எழுதினார். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை – என்று புரொன்ட் லைன் (Frontline Defenders) கூறியுள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த மலையகத் தமிழர்கள் குறித்து செய்தி வெளியிட்டதற்காகத் தன்னைக் கைது செய்ய நேரிடும் என்று பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் எச்சரித்ததாகக் கூறும் ஊடகவியலாளர் இராமச்சந்திரன் சனத், பொலிஸாரின் அச்சுறுத்தல் பேச்சு சுதந்திரத்துக்குத் தடையாக அமைந்ததுடன் உளவியல் ரீதியாகவும் கடும் அழுத்தத்தைக் கொடுத்தது என்று குறிப்பிட்டார். (02)

# யாழ்ப்பாணம் சிறையில் நூலகம் தொடக்கி வைப்பு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கான முறையான நூலகம் இன்று காலை 10:00 மணியளவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் தொடக்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைகழகம் தனது கற்றல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காகச் சமூகப் பொறுப்பாண்மை மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகளில் அண்மைக் காலமாக ஈடுபாட்டு வருகின்றது. அதன் மற்றொரு செயற்படாக இந்த நூலகம் திறந்து வைக்கப்படுதாக துணைவேந்தர் அலுவலகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் தனது சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான 2,500 புத்தகங்களை கொண்ட இந்த நூலகத்தை அமைத்துள்ளது. யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவநேசன் குடும்பம், ஐ.பி.சி. தமிழ் மற்றும் தன்னார்வலர்கள், யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறசற்குணராஜா, யாழ். பிரதேச செயலர் சுதர்சன், யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் உதயகுமார, யாழ். சிறைச்சாலை ஜெயிலர் கேரத், யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர்கள், யாழ் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை மருத்துவர், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், கைதிகள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டன்ர.

இந்நூலகத்திற்கு தொடர்ச்சியாக இயங்கு-வதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டன் தம்பதியின் பொருட்களையும் பணத்தையும் திருடிய இளைஞர் கைது!

பிரிட்டன் தம்பதியின் பொருட்களையும் பணத்தையும் திருடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான நபரே கைது செய்-யப்பட்டுள்ளார்

பிரிட்டன் தம்பதியிடம் இருந்து இரண்டு வெளிநாட்டு கடவுச்சீட்டுகள், விசாக்கள், வங்கி அட்டைகள் மற்றும் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட பொருட்கள் சில பற்றைக்குள் மறைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரி வித்தனர். சந்தேகநபர் பிரிட்டன் தம்பதியின் பணத்தையும் பொருட்களையும் திருடி, பாதுகாப்புப் பெட்டகத்தை கடலில் வீசியுள் ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் களுத்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (02)

# வெள்ளைமணல் பிள்ளையார் குடமுழுக்கு நாளை திங்களன்று

(வி.ரி. சகாதேவராஜா)

நூற்றாண்டுகள் பழமையான ஆரையம்பதி வெள்ளை மணல் ஸ்ரீ அரசடி பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று வாஸ்துசாந்தி யுடன் தொடங்கியது. சித்தர்கள் குரல் அமைப்பின் இவ்வாண் டின் முதலாவது கும்பாபிஷேக உபயம் இவ் ஆலயத்தில் தொடங்கி வைக்கப்படுகிறது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறும். வரும் திங்கட்கிழமை(10) காலை 9.00 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

அகில உலக மகாசித்தர்கள் அறக்கட்டளை சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான ஆலோசகரும் வாரணாசி பெலாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் சித்த வித்யாகீர்த்தி வேதிக்பண்டிற் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் குருஜி கும்பாபிஷேகத்தை நெறியாழ்கின்றார்.

## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த மாணவர்கள், பலபாத்வல பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில், நட்புறவு ரீதியான சந்திப்புக்குச் சென்று மீண்டும் திரும்பும் வழியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

## குளவி கொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 பேர் உட்பட 11 பேர் பாதிப்படைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த வேளையில் குளவிக்கூடு ஒன்று கலைந்து தொழிலாளர்களைக் குளவிகள் சரமாரியாக தாக்கியுள்ளன. குளவிக்கொட்டுக்கு இலக்கான தொழிலாளர்களைக் காப்பாற்றச் சென்ற இளைஞர் ஒருவரும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட 11 பேரும் பசறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (02)

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யு.எல். 225 என்ற விமானம், 189 பேர் மற்றும் 15 பணிக்குழாமினருடன் நேற்று மாலை 6.25 மணிக்கு டுபாய் நோக்கிப் பயணிக்க இருந்த நிலையில், சீரற்ற காலநிலையால், இன்று முற்பகல் 9.30 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்தது.

எனினும், பயணத்தை ஆரம்பித்து ஒரு மணித்தியாலமும், 10 நிமிடத்தின் பின்னர், அதாவது, முற்பகல் 10.40 மணிக்குக் குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீளவும் தரையிறங்கியது.

இந்தியாவுக்கு அண்மையில் பயணித்துக் கொண்ருந்த போது, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, குறித்த விமானம் மீளத் திரும்பியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பாகங்களில், இன்று கடும் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, தென், ஊவா, மத்திய, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழை பெய்யக்கூடும் என்று அந்தத் திணைக்களம் அறிவித் துள்ளது. (02)

## ராஜிதவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே எதிர்க் கட்சித் தலைவரை மேலும் கோபப்படுத்தி அதிரடி முடிவை எடுக்க வைத்தன என்று கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு மேலாக கடந்த பல மாதங்களாகவே ராஜித சேனாரத்னவின் நடவடிக்கைகள் தொடர்பில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமையிடம் தொடர்ச்சியாக முறையிட்டு வந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரணில் தலைமையிலான ஆட்சியில் தம்மையும் வந்து இணையுமாறு ராஜித சேனாரத்ன தொடர்ந்து கேட்டு வருகின்றார் என்று மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையிட்டுள்ளனர். இதனால் ராஜித தொடர்பில் கட்சித் தலைமை தெளிவான, தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அவர்கள் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக தொகுதி மட்டத்தில் கூட்டங்களை நடத்தும்போது எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கும் தொகுதி அமைப்பாளர்கள் பலரும் ராஜித்த சேனாரத்ன தொடர்பில் சஜித்திடம் முறைப்பாடு செய்து வந்துள்ளனர். நாடு முழுவதும் உள்ள தொகுதி அமைப்பாளர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் பேசி, ராஜித சேனாரத்னவை உடனடியாகக் கட்சியில் இருந்து நீக்கி அவர் ஆட்சியாளர்களுடன் இணைந்து அமைச்சுப் பதவியை பெறச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும், சேனாரத்ன தொடர்ந்தும் கட்சியில் இருப்பது கட்சிக்கு தீங்கானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றையடுத்து ராஜிதவை கட்சியிலிருந்து நீக்குவது என்கிற முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வந்துள்ளார். .

# தீ விபத்தில் ரூ 8 லட்சம் பொறுமதியான பொருள்கள் நாசம்





யாழ். கொழும்புத்துறை பிரதான வீதியில் சுண்டிக்குளி பகுதியில் வீடொன்றில் இயங்கி வந்த தனியார் விருந்தினர் விடுதி எவருமற்ற நிலையில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இன்று காலை ஒன்பது மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விடுதியில் இருந்த பெருமளவு பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்நிலையில் இது குறித்து யாழ் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மின்னொழுக்கே தீ விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். விடுதியில் இருந்த சுமார் எட்டுலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் தீயில் கருகி நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்; ஆய்வு மேற்கொள்ள வசதி வழங்குக

## சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு ஆலோசனை

2021ஆம் ஆண்டு நீர்கொழும்பு பகுதியை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகி கடலில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பலில் எஞ்சியுள்ள பாகங்களுக்கு அருகில் சென்று ஆய்வு செய்து இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கான மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள நிபுணத்துவ குழுவுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக்கொடுக்குமாறு சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா) ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகள், சுற்றாடல் உள்ளிட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர் திணைக்களம், நிதி அமைச்சு, கடற்றொழில் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கப்பலுக்கு அருகில் அல்லது கப்பலுக்குள் செல்வதற்கு முடியாமல் இருப்பது சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதத்தை அளவிடுவதற்குத் தடையாக இருப்பதாக சுற்றாடல் மற்றும் ஏனைய சேதங்களின் முழு அளவைக் கணக்கிடுவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

ஆபத்தானது எனக் காண்பித்து கப்பலுக்கு அருகில் செல்வது தடுக்கப்பட்டாலும், கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்று வசதிகளை வழங்கியிருக்க வேண்டும் என்றும்



அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கமைய கப்பலுக்கு அருகில் சென்று இதற்கான மாதிரிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பது நஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்படும் வழக்கிற்குப் பாதிப்பாக அமையலாம் என்பதால் இதற்கான வசதிகளை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை ஆகியவற்றுக்கு குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

குறித்த கப்பலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்வதற்கு இன்னமும் 45 நாள்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன எனவும் ஏற்கனவே அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு அமைவாக சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவது பாதகமானதாக அமையலாம் என சூழலியலாளர்கள் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் கருத்துத் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் 6.2 பில்லியன் அமெரிக்க டொலர் நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வது தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும், வழக்குத் தாக்கல் செய்வது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பு என்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அசேல ரக்காவ தெரிவித்தார்.

இந்த அறிக்கைக்கு அமைய குறிப்பிட்ட நட்ட ஈட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுகின்றன என சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதற்கமைய வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க விசேட கூட்டமொன்றை நடத்துவது என்றும் இதில் சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட உரிய சட்டத்தரணிகள் கலந்துகொள்வது என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இந்தச் சம்பவத்துக்கான நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரை சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஏப்ரல் 25ஆம் திகதி மீண்டும் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புத் தடைச் சட்ட மூலம்: சில ஏற்பாடுகள் நாடாளுமன்ற குழுவில் திருத்தப்படும்

## சஞ்ஜீவ எதிரிமான்ன கூறுகிறார்



வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமூல வரைவின் ஒரு சில ஏற்பாடுகள் நாடாளுமன்ற குழு நிலையின் போது திருத்தம் செய்யப்படும்.

மக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயகம் அச்சுறுத்தலுக்கு உள்ளானால் எவரும் அரசியல் செய்ய முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பெரமுன காரியாலயத்தில் ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமூல வரைவில் ஜனநாயக கொள்கைக்கு எதிரான ஏற்பாடுகள் காணப்படுமாயின் அவை நாடாளுமன்ற குழு நிலையில் திருத்தம் செய்யப்படும். நாட்டு மக்களின் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி எவரும் அரசியல் செய்ய முடியாது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது, ஒருவேளை அரசாங்கம் அவ்வாறு செயற்பட்டால் அதன் பெறுபேறு அரசாங்கத்துக்கு எதிராக அமையும். ஒருவரின் உரிமை பிறிதொருவருக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என 'உரிமை' தொடர்பில் வரைவிலக்கணம் வழங்கப்படுகிறது.

தொழிற்சங்கத்தினர் தங்களின் தொழில் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒட்டுமொத்த மக்களின் உரிமைகளுக்கும் தடையாகச் செயற்படுகிறார்கள். ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தொழிற்சங்கத்தினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். தொழிற்சங்கப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமடைந்துள்ளன.

இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், மனித உரிமைகள் அமைப்பினர் இதனை ஏன் மனித உரிமை மீறல் செயற்பாடாகக் கருதவில்லை.

ஜனநாயகத்துக்கு முன்னுரிமை வழங்கும் ஐரோப்பிய நாடுகளில் பயங்கரவாதத் தடைசட்டங்கள் கடுமையான முறையில் அமுல்படுத்தப்படுகிறது.

நாட்டின் சட்ட ஒழுங்குக்கு அமைய அனைவரும் ஒழுக்கமாக செயற்பட்டால் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. – என்றார்.

# இலங்கைக்கு உதவியதை போன்று மற்ற நாடுகளுக்கும் சீனா உதவுதல் வேண்டும்!

## ஐ.எம்.எப். கோரிக்கை

இலங்கைக்கு உதவியதை போன்று ஜாம்பியா, கானா மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களுக்கும் சீனா உதவ வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த மாதம் சீனாவுக்குச் சென்றிருந்த கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, சீனாவின் உயர்மட்ட பொருளாதார அதிகாரி உள்ளிட்டவர்களை சந்தித்து பேசிய அவர், கடன் நிவாரண விடயத்தில் சீனா ஆக்கபூர்வமான பங்கை வகிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜி20 நாடுகளின் பொதுவான கட்டமைப்பின் கீழ் உதவி கேட்ட பொருளாதார சரிவை சந்தித்த நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் சீனா ஏற்படுத்திய தாமதம் அமெரிக்கா உள்ளிட்ட பிற மேற்கத்திய நாடுகளினால் விமர்சனத்திற்கு உள்ளானது.

ஜி20 கட்டமைப்பின் கீழ் உதவிக்கு தகுதியில்லாத நடுத்தர வருமான நாடான சாட் மற்றும் இலங்கைக்கான கடன் நிவாரண ஒப்பந்தத்தை எட்டுவதற்கு சீனா உதவியாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் அதிகரித்துவரும் புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் உலகப் பொருளாதாரத்தின் துண்டாடுதல் ஆகியவை நிதி ஸ்திரத்தன்மை அபாயங்களை அதிகரிக்கலாம் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அனைவரும் தோற்கடித்தே ஆக வேண்டும்

## விஜித்த ஹேரத் விடாப்பிடி



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படுவதுடன் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் மக்களை கடும் அடக்குமுறைக்கு தள்ளிவிடுவதற்கு ஜனாதிபதிக்கு இதன் மூலம் முடியுமாகிறது.

அதனால் இந்த சட்டமூலத்தை தோற்கடித்தே ஆகவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். உத்தேச பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பொதுவாக அனைவருக்கும் பாதிப்பாக அமைகிறது. அரசாங்கத்துக்கு ஒன்றை செய்யுமாறு தெரிவித்தாலும் அல்லது செய்ய வேண்டாம் எனத் தெரிவித்தாலும் அது பயங்கரவாத செயலாகவே பார்க்கப்படும்.

உதாரணமாக விவசாயிகள் உரம் கேட்டு போராடினால் அதற்கு எதிராக செயற்பட முடியும். வரி குறைக்குமாறு போராடினால் அதற்கு எதிராக செயற்பட முடியும். தொழிற்சங்க உறுப்பினர்களுக்கோ அல்லது மக்கள் கூட்டமொன்றுக்கு ஒன்றாக கூட முடியாது.

அத்துடன் கடந்த காலங்களில் காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இதன் பின்னர் முன்னெடுக்க முடியாது. அதேபோன்று ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் கடும் அழுத்தங்கள் இருக்கின்றன.

முகப்புத்தகம், ருவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் அரசாங்கத்துக்கு விரோதமான கருத்துக்களை தெரிவிக்க முடியாமல் போன்றன. இராணுவத்தினருக்கு நபர்களைக் கைதுசெய்ய முடியுமாகிறது.

மேலும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டை முறையாக தாக்கல் செய்யாமல் 3 மாதங்களுக்கு அவரை தடுத்துவைக்க முடியும்.

இந்த குற்றச்சாட்டை அதன் பின்னரும் முறையாக தாக்கல் செய்ய முடியாமல் போனால் நீதிமன்றம் ஊடாக மேலும் 3 மாதங்களுக்கு நீடித்துக்கொள்ள முடியும். அத்துடன் அத்தியாவசிய சேவைகளுக்குத் தடை ஏற்படும் வகையில் கருத்துக்களை தெரிவிக்க முடியாது. உதாரணமாக, தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் அது தொடர்பில் ஊடகவியலாளருக்கு எழுத முடியாது.

அரசியல்வாதிகளுக்கும் வெளியில் கருத்து தெரிவிக்க முடியாது. இதன் ஊடாக மக்களை கடும் அடக்குமுறைக்கு தள்ளி விடுவதற்கு ஜனாதிபதிக்கு முடியுமாகிறது. அதனால் இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அனுமதிக்கப்பட்ட பின்னர், சாப்பிடுவதற்கும் அரசாங்கத்தின் புகழ் பாடுவதற்கும் மாத்திரமே மக்களுக்கு வாய் திறக்க முடியுமாகிறது.

அதனால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களின் ஜனநாயக உரிமைக்கு விரோதமாகவே அமைந்துள்ளது. எனவே இந்த சட்டமூலத்தை நிச்சியமாக தோற்கடித்தே ஆகவேண்டும். - என்றார்.

# மண்முனையில் கவிதைப் பயிற்சி பட்டறை





(பழுவூரான்)

மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான கவிதைப் பயிற்சிப் பட்டறை அண்மையில் முதலைக்குடா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மண்முனை தென்மேற்கு கல்வி கோட்டத்திற்குட்பட்ட தரம் 10 தொடக்கம் தரம் 13 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கே இப்பயிற்சி பட்டறை ஒழுங்கு செய்யபட்டிருந்தது.

இதன்போது ஓய்வு நிலைப் பேராசிரியர் செ.யோகராசா, கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்க் கற்கைகள் துறை விரிவுரையாளரும், ஒன்றியத்தின் தலைவருமான கலாநிதி த.மேகராசா ஆகியோர் வளவாளர்களாகவிருந்து குறித்த பயிற்சிப் பட்டறையை முன்னெடுத்திருந்தனர்.

மாணவர்களின் கவிபுனையும் ஆற்றலை வளர்ப்பதையும், ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதாக ஒன்றியத்தின் செயலாளர் அ.தேகதாஸ் குறிப்பிட்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உயிர்த்த ஞாயிறு ஞாபகங்கள்

விடிந்தால் உயிர்த்த ஞாயிறு. நள்ளிரவு முதல் ஆராதனைகள் தொடங்கும். அதையொட்டி வியாழக்கிழமை முதலே தேவாலயங்கள் உள்ள பகுதிகளில் காவல் துறையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. 4 ஆண்டுகளுக்கு முன்னர் 2019 உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் நடந்துகொண்டிருந்தபோது இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்ட மிக மோசமான குண்டுத் தாக்குதல்களால் பேரிடர் நிகழ்ந்தது. குண்டுகளை வெடிக்க வைத்தவர்கள் தம்மை மட்டுமன்றி ஆராதனைகளில் கலந்துகொண்டிருந்த பல நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களையும் காவு வாங்கினார்கள்.

இந்தக் குண்டுவெடிப்புக்களில் 269 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 45 பேர் வெளிநாட்டவர்கள். 3 பேர் காவல்துறையைச் சேர்ந்தவர்கள். 8 பேர் குண்டுகளைத் தம்மோடு சேர்த்து வெடிக்க வைத்தவர்கள். மேலும் 500 பேர் இந்தக் குண்டுவெடிப்புக்களால் காயமடைந்தனர். நீர்கொழும்பு, மட்டக்களப்பு, கொழும்பு கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் இருந்த தேவாலயங்களிலேயே குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. சங்கரில்லா, சினமன் கிரான்ட், கிங்ஸ்பரி போன்ற அதிசொகுசு விடுதிகளிலும் ட்ரொப்பிகள் இன் விடுதியிலும்கூடக் குண்டுகள் வெடித்தன.

தாக்குதலாளிகள் இரண்டாவது குண்டுவெடிப்பு அலை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்தனர் என்றும் ஆனால், பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகள் எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக அது தடுக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். யாரும் எதிர்பார்த்திருக்காத நிலையில் நிகழ்த்தப்பட்ட இந்தக் குண்டுவெடிப்புக்கள் மக்களிடம்பேரதிர்ச்சியைஏற்படுத்தின. ஆனால், இத்தகைய குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்படலாம் என்று பாதுகாப்பு உளவுப் பிரிவுகள் தகவல் தந்திருந்தும் அதன் மீது உரிய அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் அக்கறை செலுத்தாதன் காரணமாகவே இவ்வளவு பெரிய இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டது என்று கூறப்பட்டது. இந்த வருடத் தொடக்கத்தில் அந்தக் குற்றச்சாட்டை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. அதற்காக, முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அதிகாரிகள் சிலருக்கும் நீதிமன்றம் தண்டம் விதித்தது. குண்டுவெடிப்புக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர்கள் இழப்பீடு வழங்கவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இருப்பினும் இந்தக் குண்டுவெடிப்புக்களின் பின்னணியில் சில அரசியல் சதி இருந்திருக்கும் என்கிற சந்தேகம் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னரும் நீங்கியதாக இல்லை. இலங்கை அதிகாரிகள் மீதான நம்பிக்கையீனம், இந்த விசாரணைகளின் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அரசுத் தலைவர் தேர்தல் நடக்கவிருந்த சமயத்தில் இந்தக் குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்த பின்னணியில், அதன் பின்னணியில் அரசியல் சதி இருக்குமே என்கிற சந்தேகம் தீர்க்கப்படவேண்டும் என்று கத்தோலிக்க மத அமைப்புகள் வலியுறுத்துகின்றன. ஆனால், ஆட்சியாளர்கள் அது குறித்து அக்கறைப்படுவதாக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் விசாரணைகள் முடிந்துவிட்டன. எல்லாமும் நல்லபடியாக நிறைவுக்கு வந்துவிட்டன.


ஆனால், அந்தக் குண்டுவெடிப்புக்கள் ஏற்படுத்திய பாதிப்பு மற்றும் அதிர்வுகள் இன்னும் மறைந்துபோகவில்லை. உயிர்த்த ஞாயிறையொட்டி சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளை தேவாலயங்களுக்கு அருகில் ஏற்படுத்துவதே அந்த அதிர்வின் வெளிப்பாடுதான். அப்படியிருக்கும்போது குண்டுவெடிப்புகளின் பின்னணியில் ஏதாவது சதித் திட்டங்கள் இருந்திருந்தால் அவை மக்கள் முன் அம்பலப்படுத்தப்படுவது மிக அவசியம். அதற்குச் சுயாதீனமான, அரசியல் தலையீடுகளற்ற. பக்கஞ்சாராத வெளிநாட்டவர்களை அல்லது அமைப்புக்களைக் கொண்ட விசாரணைகள் அவசியம். குண்டுவெடிப்புக்களின் 5ஆவது ஆண்டை நோக்கி முன்னேறுகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கவேண்டியும் உயிரோடு இருப்பவர்களுக்கு நிம்மதி கிடைக்கவேண்டியும் ஆட்சியாளர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறப்பாகச் செயற்படுகின்றாராம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பாக செயற்படுகின்றார் என்றும் இதனை பொது மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அரசாங்கத்துக்கு கட்சி தாவவுள்ளதாக வெளியான செய்திகளைத் தாம் முழுமையாக மறுப்பதாகவும் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த வாரம் இதேபோன்ற கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் ஜனாதிபதிக்கு சாதகமாகப் பேசிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பௌசியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் வாழும் இந்துக்களுக்கு நீதி கோரி டெல்லியில் போராட்டம்!

இலங்கையில் வாழும் இந்துக்களுக்கு நீதி கோரி டெல்லியில் இந்துக்கள் அமைப்பினரால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள கோவில்களை இடிப்பதற்கும், இந்துக்களுக்கு தீங்கு விளைவிப்பதற்கும் எதிர்ப்;பு தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பழைமையான வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த இந்து கோவில்களை இடித்து, இந்து தமிழ் சமூகத்தின் கலாசார இனப் படுகொலையை இலங்கை அரசாங்கம் செய்து வருவதாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

இதுபோன்ற செயற்பாடுகள் இந்துக்களுக்கும், இந்தியாவுக்கும் எதிராகத் தீங்கிழைக்கும் செயல் என இந்து இயக்கத்தின் சர்வதேசதலைவர் ஸ்ரீ அருண் உபாத்யாய் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்த பிரச்சினையை இந்திய அரசு உணர்ந்து, இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கடும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சுற்றுலாத்துறை மூலம் மார்ச்சில் 200 மில்லியன் டொலர் வருவாய்

சுற்றுலாத்துறையின் மூலம் மார்ச் மாதத்தில் 200 மில்லியன் டொலர் வருவாய் கிடைத்துள்ள நிலையில் இந்த காலாண்டில் மட்டும் 500 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 198.1 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்றும் இது முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில்,22 சதவீத அதிகரிப்பு என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், தேசியப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

2022ஆம்ஆண்டின்இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், வருவாய் 9.8 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தில் நிலவும் சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கையின் சுற்றுலாத் துறையானது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நிலையான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பயங்கரமானது; திருத்தவேண்டும்

## கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது மிகவும் பயங்கரமானது என கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்தார். ஊடகங்களுக்கு இன்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்களுக்காக உருவாக்கப்பட வேண்டிய சட்டங்கள் சுயநல அரசியல் நோக்கங்களுக்காகவும் சிறுபான்மை மக்களை நசுக்கு–வதற்காகவுமே பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த காலங்களில் அரங்கேறிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து நடந்தேறிய சிறுபான்மை முஸ்லீம்களின் கைதுகள், மதரசாக்கள், பள்ளிகள் தாக்கப்பட்டமை என்பன அதற்குச் சிறந்த சான்றுகளாகும். அந்த அடிப்படையிலேயே தற்போது அதைவிடப் பயங்கரமான பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டுவரப்பட இருக்கின்றது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர்

1) பயங்கரவாதம் என்ற சொல்லை முறையாக வரைவிலக்கணப் படுத்த வேண்டும்.

2) அச் சட்ட மூலத்தை மூன்று மொழிகளிலும் மக்களுக்கு தெரியப் படுத்த வேண்டும்.

3) நாட்டை அழிக்கும் போதைப்பொருள் வியாபாரம், அரச சொத்துக்களின் மீதான பெரும் கொள்ளைகள், என்பவற்றையும் பயங்கரவாதச் செயற்பாடுகளாக வரையறை செய்யவேண்டும்.

5) பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் 48 மணித்தியாலயங்களுக் குள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவேண்டும்.

6) பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட முடியாத விடத்து அக் கைதுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். என்பன போன்ற பல கோரிக்கைகளை நீதியமைச்சரிடம் முன்வைப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சைவப் புலவர் சங்கத்தால் வடக்கு, கிழக்கில் சிவதீட்சை

## அடுத்த வார இறுதியில் ஏற்பாடு

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை சிவ தீட்சை வழங்கப்படும் என்றுஅறிவவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் குமாரசுவாமி வீதியில் உள்ள சிவ குருநாதபீடத்திலும் (வேதாந்தமடம் சமாதி கோயில் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) கிழக்குமாகாணத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்திலும் காலை 9 மணிக்குதீட்சா குருக்கள் சைவாகம பூசணம் சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள், (பிரதமகுரு ,வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தானம், வரணி ஆதீனம்) சிவஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் ஆகியோரால் வழங்கப்படவுள்ளது.

தீட்சை பெறுவோர் சைவ கலாசார உடை அணிந்து சிறிய செம்பு, கரண்டி,தாம்பாளம், பூக்கள், குருதட்சணை எடுத்து வருதல்வேண்டும்.

தீட்சை அன்று உபதேச பயிற்சி வழங்கப்பட்டு உருத்திராட்சம் அணிவிக்கப்படும். அத்துடன் சங்கத்தினால் நித்திய கரும விதி புத்தகமும் சிவ தீட்சைசான்றிதழும் வழங்கப்படும்.

அத்துடன் மகேஸ்வர பூசை(அன்னதானமும்) வழங்கப்படும் சைவப்புலவர் சங்கப் பரீட்சை எடுக்காத வேறு எவரும்கூட இந்த நிகழ்வில் பங்கேற்று சிவதீட்சை பெற முடியும் என்று சங்கத்தின் செயலாளர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

தீட்சைபெற விரும்பும் வடக்கு மாகாணத்த வர்கள் தங்கள் பெயர்களை 0777197067, 0779773538, 0764096121 ஆகிய எண்கள் மூலமும் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்தவர்கள் 0771768830, 0718380878 ஆகிய எண்கள் மூலம் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.